**கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டம் - 2018**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது திட்டத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு திட்டத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- திட்டத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சங்கத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- சங்கத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சங்கத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| (அ) நியமம் 16 இன் பிரகாரம் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட ரூபா 31,732,585 கிரயமான 24 மோட்டர்ர் வாகனங்கள் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தும் | நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது சபையின் கொள்கையானது கிரயப் பெறுமதியின் அடிப்படையில் சொத்துக்களை கணக்கீடு செய்வதாகும். தற்பொழுது அனைத்து | அந்த வாகனங்களின் விளைதிறன் ஆயுட் காலத்தினை கவனத்தில் கொண்டு மீள் மதிப்புச் செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாகனங்களின் விளைதிறன் ஆயுட்காலத்தை கருத்திற்கொண்டு மீள்மதிப்புச் செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களுக்கும் நிகழ்கால சந்தைப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அடுத்துவரும் ஆண்டுகளின் போது உரிய செம்மையாக்கல்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நியமம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்படுகின்ற பங்களிப்பாளர்களை இனங்காண்பதற்கு காலக் கணிப்பு மதிப்பீடு காலரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விவசாயிகளின் மரண பணிக்கொடை நிதியத்திற்காக ரூபா 19,853,880 தொகையான நிதி ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | விவசாயிகளின் மரண மற்றும் பலவீனமடைதல் பணிக்கொடை கொடுப்பனவிற்கான ஒதுக்கீடானது விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்தின் மூலம் கணிப்பீடு செய்து விவசாயிகளின் மரண மற்றும் பலவீனமடைதல் நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது. | 2007 ஆம் ஆண்டின் பிரகாரம் காலக் கணிப்பு மதிப்பீடு காலரீதியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | மஹியங்கனை, எம்பிலிபிடிய, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் பேணப்படுகின்ற உத்தியோகபூர்வ இல்லங்களில் திட்டத்திற்குச் சொந்தமான 76.6 பேச்சர்ஸ் காணிகளின் பெறுமதி மற்றும் எம்பிலிபிடிய உத்தியோகபூர்வ இல்லத்தின் கட்டிடத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மஹியங்கனை எமிபிலிபிடிய, அநுராதபுரம் ஆகிய உத்தியோகபூர்வ இல்லங்களின் காணிகளின் பெறுமதி மற்றும் எம்பிலிபிடிய உத்தியோகபூர்வ இல்லத்தின் பெறுமதியை மதிப்பீடு செய்வது சம்பந்தமாக தேவையான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விரைவாக அந்நடவடிக்கையைப் பூர்த்தி செய்து மதிப்பீட்டு பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சிடமிருந்தும் விவசாய அமைச்சிடமிருந்தும் ஒப்படைக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | இவ்வாகனங்களை அடுத்து வரும் ஆண்டின் போது ஆதனம், பொறி உபகரணங்கள் என்பவற்றின் கீழ் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தற்பொழுது மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 5 ஆண்டுகளுக்கும் 25 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக காணப்பட்டு வரும் ரூபா 857,406 மொத்த தொகையான ஊழியர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் ஊழியர் பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து காலரீதியாக அறவீடு செய்யப்படாது கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்டது. | சபையில் சேவையிலிருந்து விலகிச் சென்ற / ஓய்வு பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கொடுப்பனவு செய்யத் தவறிய கடன் மீதிகள் மற்றும் வட்டிப் பணத்தை அறவீடு செய்வதற்காக கோரிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க கொடுப்பனவு செய்பவரின் எதிர்காலத்தில் அதற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | இளைப்பாற்ற பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 5 ஆண்டுகளுக்கும் 14 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகக் காணப்பட்ட ரூபா 708,337 மொத்த தொகையான பெற வேண்டிய சம்பளங்கள், சம்பள முற்பணங்கள், நானாவித கடன்பட்டோர் மீதிகள் என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்டன. | சபைக்கு பல்வேறு தரப்பினர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 708,347 தொகையான இம் மீதியை உரிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்காக தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2018 ஆம் ஆண்டின் சிறு போகம் மற்றும் பெரும்போகத்திற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கு ரூபா 2,200,000,000 நிதி ஏற்பாடு பொதுத்திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் அவற்றில் ரூபா 437,980,000 மாத்திரம் கிடைத்திருந்தது. இம் முழுப்பணமும் விபரமான | 2018 ஆம் ஆண்டிற்கான அரசாங்க வரவு செலவுத் திட்ட நிதி ஏற்பாட்டை ஒதுக்கீடு செய்யும் போது கட்டாய பயிர்க் காப்புறுதிக்கான தவணைப் பணமாக ரூபா 2200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அத்தவணைப் பணத்தில் சபைக்கு கிடைக்காத தவணைப் பணமாகிய ரூபா 1,762,120,000 தவணைப் | 2019 யூன் 06 ஆந் திகதி ரூபா 1,762 மில்லியன் பொதுத் திறைசேரியால் அங்கீகரிக்கபட்டிருந்தும் 2019 யூலை 15 திகதி அதில் ரூபா 500 மில்லியன் மாத்திரம் கிடைத்திருக்காததனால் எஞ்சிய பணத்தையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருமானக் கூற்றில் ஒரு வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பணமாகிய ரூபா 1,762,120,000 கிடைக்க வேண்டியதாக ஐந்தொகையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இப் பணம் கணக்காய்வுத் திகதி வரை நிறுவனத்திற்கு கிடைத்திருக்காததுடன் திறைசேரியினால் வழங்கப்பட வேண்டும் என்பதனை உறுதிப்படுத்தும் கடிதமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இப் பெற வேண்டிய பணத்தை கணக்கீடு செய்ததன் காரணமாக ஆண்டிற்கான இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 1860 சதவீதம் அளவில் அதிகரித்திருந்தது. | பணத்தைக் கோரி திறைசேரிக்கு வேண்டுதல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதுடன் அப் பணத்தை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தெளிவுபடுத்தல்கள் பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பொதுத் திறைசேரியால் எதிர்காலத்தில் இப்பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக வாய்மொழி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

## 1.6 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,540,444 மொத்த தொகையான செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தில் 2004 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டுவரை செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தை இன்றுவரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் கட்டணத்தை முறையாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மூன்று மடங்கு அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளதனால் அக் கணக்காய்வுக் கட்டணத்துடன் இணங்க முடியாதுள்ளது. அக் கட்டணத்தை குறைத்து தருமாறு 2018.10.04 ஆந் திகதி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை அதற்கு பதில் கிடைக்கவில்லை. | கணக்காய்வுக் கட்டணத்தை முறையாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| 2015 மே 25 ஆந் திகதிய 1/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ வாகனத்திற்கும் போக்குவரத்துப் படிக்கும் தகமையற்ற ஒரு பிரிவுத் தலைவருக்கு ஒரு மாதத்திற்கு ரூபா 8000 தொகையும் ஒரு நிறைவேற்று உத்தியோகத்தருக்கு ரூபா 4000 தொகையுமாக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டுகளின் போது ரூபா 3,083,490 பணம் செலுத்தப்பட்டிருந்தது. | PED1/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு சபையில் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் அளவு போதியதாக இல்லாததனால் சபையின் அங்கீகாரத்தின் கீழ் இப் படிகள் செலுத்தப்பட்டுள்ளன. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செற்பாட்டு விளைவுகள் ரூபா 978,995,887 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 49,930,208 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 929,065,679 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு 2018 ஆம் ஆண்டிற்கான சிறுபோக மற்றும் பெரும்போகத்திற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவிற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய தவணைப் பணமான ரூபா 1,762,120,000 தொகை வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 2018 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2019 மார்ச் 31 ஆந் திகதி வரை 6 கட்டாய பயிர் வகைகளுக்காக இலவசமாக காப்புறுதிக்கான உச்ச அளவு காப்புறுதிப் பொறுப்புக்களின் | இயற்கை அனர்த்தங்களுக்காக ஒரு ஏக்கருக்கு செலுத்திய இழப்பிட்டுப் பணம் ரூபா 10,000 இலிருந்து ரூபா 40,000 வரை அதிகரிப்பதுடன் அதற்கு | மத்திய வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏக்கர் அளவுகளின் பிரகாரம் பொறுப்பு மதிப்பீடு |

பெறுமதி ரூபா 5,000,000,000 அளவில் இருக்ககூடிய காப்புறுதிப் பொறுப்பிற்கு மீள் காப்புறுதி பெறுமதி ரூபா 3,500,000,000 ஆக இருந்த போதிலும் மத்திய வங்கியின் அறிக்கையை சரியாக ஈடுபடுத்தாததன் காரணமாக காப்புறுதி பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 7,500,000,000 ஆகத் தீர்மானித்து ரூபா 5,315,000,000 மீள் காப்புறுதிப் பெறுப்பினை நிறுவனம் மேற்கொண்டதன் காரணமாக ரூபா 1,815,000,000 மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

சமாந்தரமாக காப்புறுதிப் பொறுப்பும் அதிகரித்துள்ளது. இந்த மீள் காப்புறுதி நடைமுறையின் போது கட்டாய பயிர்ச்செய்கைக் காப்புறுதிக்குரியதான பயிர்களின் பயிர்ச்செய்கையில் (நெல், இறுங்கு, சோளம், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு) 2018 ஆம் ஆண்டின் போது மொத்த பயிர்ச்செய்கைப் பரப்பளவு 2,751,244 ஏக்கர்களாகக் கருதி மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம் எதிர்பார்கப்பட்ட பயிர்ச் சேத பரப்பளவு பயிர்ச்செய்கயைில் 15 சதவீதமான 412,686 ஏக்கர்கள் அரசாங்கத்தின் பொறுப்பு எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த ஏக்கர் அளவுக்காக மொத்த பொறுப்பு ரூபா 82,537 மில்லியன் எனக் கருதப்பட்டிருந்தது. இப் பயிர்ச்செய்கை பரப்பளவில் 15 சதவீதம் சேதமடைந்துள்ளது என எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அனைத்து சேதங்களும் வழக்கமாக பயிரின் இரண்டாவது சந்தர்ப்பத்தில் ஏற்படக்கூடியது என்ற அடிப்படையில் மொத்த காப்புறுதிப் பொறுப்பு ரூபா 7,500 மில்லியன் என கருதப்பட்டிருந்தது. இது மத்திய வங்கியின் அறிக்கைக்கு இணங்க ரூபா 15,000 மில்லியனாகும்.

(82537x15%=12380x60%)

மொத்த பொறுப்பு ரூபா 82,537 மில்லியனாக இருக்கக்கூடிய சேதத்தின் அளவு 15% ரூபா 12,380 மில்லியன் சேத சந்தர்ப்ப கருதுகோளின் அடிப்படையில் இரண்டாவது சந்தர்ப்ப 60% எதிர்பார்த்த பொறுப்பு ரூபா (12,380x60%=7,500) மில்லியன். இதற்கிணங்க காப்புறுதிப் பொறுப்பு மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

செய்யப்படுதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேலே குறிப்பிட்ட மீள் காப்புறுதிக்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 2,185,000,000 வரையான இழப்பீட்டு பெறுமதியை சபையினால் மேற்கொள்வதற்கும் ரூபா 1,500,000,000 இழப்பீட்டுப் பணத்தை தேசிய காப்புறுதி நம்பிகைப் பொறுப்பு நிதியத்தால் மேற்கொண்டதன் பின்னர் மீள்காப்புறுதிக்குச் செல்வதற்கான தகமை காணப்பட்டது. மீள் காப்புறுதி தவணைப் பெறுமதியான ரூபா 675,760,000 தொகையை சபையினால் கொடுப்பனவு செய்வதன் அடிப்படையில் ரூபா 4,360,760,000 தொகை உள்நாட்டில் இழப்பீடிற்காக மேற்கொள்ளப்படும் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் 2018 சிறுபோகம் மற்றும் 2018/19 பெரும்போகத்திற்காகச் செலுத்தப்பட்ட மொத்த இழப்பீட்டுப் பெறுமதி ரூபா 412,617,374 ஆக இருந்ததனால் வெளிநாட்டு மீள் காப்புறுதி தவணைப் பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 473,032,000 பணம் விளைவற்ற செலவாக மாமறியிருந்தது. | நிலவிய கால நிலையில் அதிக அச்சம் உருவாகியிருந்ததனாலும் இந் நிலைமையில் முன்னர் காணப்பட்ட போகத்துடன் ஒப்பிடுகையில் அதிக ஆபத்து உருவாகியிருந்தமை மீள் காப்புறுதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இம் மீள் காப்புறுதிக்காக அடிப்படையாக கொள்ளப்பட்டமையானது காப்புறுதி நடைமுறைகளின் பிரகாரம் முன்எதிர்வு கூறப்பட்ட பெறுப்பாகும். அவ்வாறு எதிர்பார்க்கப்பட்டவாறு சேதம் ஏற்படுமாகவிருந்தால் மீள் காப்புறுதியின் மூலம் சேதத்தை நிவர்த்தி செய்வதற்கு முடியுமாகயிருந்தது. அம் மீள் காப்புறுதியினைப் பெற்றுக்கொள்ளும் போது அமைச்சரவை அங்கீகரித்த கேள்விச் சபையின் மூலம் தொழிலுள்ள நிபுனர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் மூலம் இதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் காப்புறுதி நடைமுறையினுள் நடவடிக்கை எடுத்துள்ளதன் காரணமாக இத்தவணைப் பணத்தை விளைவற்ற ஒரு செலவாக இனங்காண முடியாதிருந்தது. | கடந்த கால சேதரவுகளும் மத்திய வங்கியின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட தரவுகளும் மற்றும் 2018 சிறுபோகம் மற்றும் 2018/2019 பெரும் போக இழப்பீட்டு கொடுப்பனவுகளும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகையில் வெளிநாட்டு மீள் காப்புறுதிக்குச் செலுத்தப்பட்ட பணம் விளைவற்றதனால் உள்நாட்டு மீள் காப்புறுதிக்கு செல்ல வேண்டும். |
| (இ) | 2018 சனவரி 03 ஆந் திகதியிலிருந்து 2018 மார்ச் 16 ஆந் திகதி வரை சபைக்கு அறிக்கையிடப்பட்ட விவசாயிகளின் 16,466 அழைப்புக்களை பதிவு செய்துகொள்வதற்கு சபையின் 43 உத்தியோகத்தர்களிடமிருந்து நிரந்தர கடமைகளுக்குப் புறம்பாக 15587 கடமை மணித்தியாலங்களை உள்ளடக்கி பெற்றுக்கொள்ப்பட்ட விவசாயிகளின் பெயர் பயிர் சேதமடைந்த காலம், ஏக்கர் அளவு, பிரதேசம், அடையாள அட்டை இலக்கம் என்பன பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தும் அத் தரவுகள் இழப்பீட்டுக் கணிப்பீட்டின் போது விவசாயிகளின் ஆள் அடையாள அட்டைகளுடன் ஒப்பீடு | இத்தரவுகளுடன் ஒப்பீடு செய்து விவசாயிகளுக்கு சேதத்திற்கான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அதிக அளவான சேதங்கள் அறிக்கையிடப்பட்டதுடன் நடைமுறையில் அச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருந்ததன் அடிப்படையில் அது நடைமுறைப்படுத்தப்படாததுடன் சேதங்களைத் தெரியப்படுத்தும் விபரம் இழப்பீட்டுக் கொடுப்பனவிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படாததனால் அதற்காக செலவு செய்த காலம் விளைவற்றுக் காணப்பட்டது. | | |
| (ஈ) | 2016/2017 பெரும் போகத்திற்கு தோற்றமாகுதல் இழப்பீடாக 8,185 விவசாயிகளுக்கு ரூபா 70,800,200 தொகையான பணம் கணக்கு இலக்கம் விவசாயின் பெயர் அடையாள அட்டை இலக்கம் என்பன இணங்கி இருக்காததன் காரணமாக வங்கியினால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அப்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரை விவசாயிகளை இனங்கண்டு அவர்களுக்குத் தெரியப்படுத்தி தகவல்களை ஆராய்ந்து பார்த்து கொடுப்பனவு செய்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காது அப்பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்ட விவசாயிகளுக்காக திருத்திய ஆவணங்களைத் தயாரித்து அனுப்புமாறு கமநல சேவை நிலையங்களுக்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவ்வாறு சரியான ஆவணங்கள் கிடைத்த உடன் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சரியான தகவல்களைக் வங்கிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதி முறைமைகளை அமுல்ப்படுத்துவதற்கு விவசாயிகளின் தகவல்களை உள்ளடக்கிய தகவல் முறைமையைத் தோற்றுவிப்பது அத்தியாவசியமாக இருந்த போதிலும் அது இது வரை தோற்றுவிக்கப்படாதிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 64,400 செலவு செய்து கடினப் பொருட்களும் மென்பொருட்களும் கொள்வனவு செய்வதற்காக பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருந்தும் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படாதமையால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் விளைவற்றதாக இருந்தது. | விவசாயிகளின் தகவல்களை உள்ளடக்குவதற்கும காணிகள் மற்றும் வயல்களை படம் வரைவதற்கும் தேவையான தரவு முறைமையை உருவாக்கி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் நடமாடும் தொலைபேசிகளைப் பயன்படுத்தி மேலே குறிப்பிட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஒரு மொடியூலும் உருவாக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | விவசாயிகளின் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையைத் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | நாடு முழுவதும் பசளைகளைப் பெற்றுக் கொள்ளும் விவசாயிகளின் விண்ணப்பபடிவங்களை ஸ்கேன் செய்து கணனி மயப்படுத்துவதற்குத் திட்டமிடல் மேற்கொள்ளப்படாமல் 5 மாவட்டங்களில் மாத்திரம் 281,250 விவசாயிகளின் விண்ணப்ப படிவங்கள் மாத்திரம் ஸ்கேன் செய்து கணனி மயப்படுத்தப்பட்டிருந்தன. இதற்காக 2017 ஆகஸ்ட் மாத்திலிருந்து 2018 யூலை வரை ரூபா 2,757,809 செலவு செய்யப்பட்டிருந்தும் அத் தரவுகளை இழப்பீட்டுக் கொடுப்பனவு | இத்தரவுகளையும் பசளை நிவாரணங்கள் வழங்கிய விவசாயிகளின் ஆவணங்களையும் அடிப்படையாக கொண்டு விவசாயிகளின் தகவல்களை இழப்பீடுகளைக் கணிப்பிடு செய்வதற்கான தரவு முறைமையைத் தயாரிப்பதற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. | காப்புறுதிப் பிரிவுடனான கலந்துரையாடலின் போது அத்தகவல்கள் பயன்படுத்தப்படவில்லை. என வெளிப்படுத்தப்பட்டதன் காரணமாக எதிர்காலத்தில் இழப்பீட்டுக் கணிப்பீட்டிற்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நடைமுறைகளுக்குப் பயன்படுத்த முடியாது இழப்பீடுகளைக் கணிப்பீடு செய்வதற்காக உரிய மாவட்ட அலுவலகங்களுக்கு சபையின் உத்தியோகத்தர்களை அனுப்பியதன் காரணமாக அச் செலவுகளை விளைவற்ற செலவாக இனங்காணக்கூடியதாக இருந்தது.

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 2016/2017 பெரும் போகத்திற்கு தேக ஆரோக்கியமான இடைப்பயிர்கள் பயிரிட்டு சேதமடைந்து 32 குருநாகல் விவசாயிகளுக்குத் தகமையுள்ள ரூபா 276800 பணம் பிழையாக ஒரு விவசாயியின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டதன் காரணமாக எஞ்சிய 31 விவசாயிகளுக்கும் கொடுப்பனவு செய்யும் சந்தர்ப்பம் இல்லாம் போயிருந்தது. | இந்த 32 விவசாயிகளுக்குரிய ஒரே வங்கிக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்ட பணம் வங்கியினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் இக் கொடுப்பனவுகள் தொடர்பாக அமைச்சின் மூலம் புலனாய்வு செய்து அப்பணம் அறவீடு செய்யப்பட்டுள்ளது. கொடுப்பனவு நிராகரிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மீண்டும் கணக்கு இலக்கத்தை சரி செய்து அனுப்புமாறு கமநல சேவை நிலையங்களுக்கும் மாவட்ட அலுவலகத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அத்தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட உடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். | உரிய தரப்பினர்களின் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016/2017 பெரும்பேகத்தின் போது விவசாயிகளுக்கு ரூபா 10,000 வீதம் மாத்திரம் இழப்பீடு செலுத்த வேண்டிய போதிலும் 07 மாவட்டங்களில் ஒரே அடையாள அட்டை இலக்கத்தையும் ஒரே பெயரையும் குறிப்பிட்டு 364 விவசாயிகளுக்கு ரூபா 3,148,600 தொகையும் 5 மாவட்டங்களில் அடையாள அட்டை இலகத்தில் மாற்றங்களுடன் ஒரே பெரினைக் குறிப்பிட்டு 50 விவவாயிகளுக்கு ரூபா 432,500 பணம் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக இரண்டு தடவை | இந்த இழப்பீட்டு ஆவணங்களுக்குரிய விவசாய நிலம் விவசாயக் காணியின் உரிமை மற்றும் வங்கியை இனங்காணல் என்பவற்றிற்காக கமநல சேவை நிலையத்தின் மூலம் பயன்படுத்துப்பட்ட அடிப்படை ஆவணமாமகிய விண்ணப்ப படிவத்தின் இலக்கத்தை (DO serial No) பரீட்சித்த போது தனியான அடிப்படை ஆவணம் உள்ளது என்பது உறுதிப்படுத்துப்பட்டது. இந்த விவசாயிகளுக்கு கொடுப்பனவு செய்யும் போது தேசிய அடையாள அட்டைகளில் இலக்கங்களில் சிறு சிறு வித்தியாசங்கள் | உரிய தரப்பினர்களிடமிருந்து சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த மிகையாகச் செலுத்தப்பட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்பட்டதன் காரணமாக மேற்கூறிய நிலை உருவாகியுள்ளதுடன் சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறு பசளை நிவாரணங்களை கொடுப்பனவு செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட நடைமுறையே அத்தரவு முறைமையின் மூலம் கொடுப்பனவு செய்தல் இடம்பெற்றிருந்தது. | |

### 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மஹியங்கனை மற்றும் எம்பிலிபிடியவில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லங்கள் தேவையான திருத்தங்கள் செய்யப்படாது 10–20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | உரிய சொத்துக்களை புனரமைப்புச் செய்து பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பயன்படுத்தப்படாத சொத்துக்களை புனரமைப்புச் செய்து பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கண்டி, அம்பாறை, மன்னம்பிட்டி, மாகோ ஆகிய மாவட்டங்களில் விவசாய காப்புறுதி சபைக்கு சொந்தமான மாவட்ட அலுவல்கள்களை நிர்மாணிப்பதற்காக பிரதேச செயலகங்களின் மூலம் காணிகள் பொறுப்பேற்கப்பட்டிருந்தும் அக் காணிகளில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அத் திகதியிலிருந்து 1 – 11 ஆண்டுகள் வரையான காலம் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களில் அலுவலகங்கள் செயற்பட்டு வந்திருந்தன. | இக் காணிகளின் உரிமையை உரிய முறையில் பொறுப்பேற்று மாவட்ட அலுவலகங்களை நிர்மாணிப்பதற்காக நிதி வழங்கப்பட்டு நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மாவட்ட அலுவலகங்களை நிர்மரிணத்து வாடகை கட்டிடங்களிலிருந்து வெளியேறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தேவைப்பாட்டினை இனங்கண்டுகொள்ளாது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,790,956 பெறுமதியான படிவங்களும் இழப்பீட்டு விண்ணப்படிவங்களும் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. | அரசாங்கத்தின் கொள்கை மாற்றங்களுடன் சில ஆவண்ங்களை மாற்றம் செய்ய வேண்டியிருந்ததுடன் பயன்படுத்தக்கூடிய அனைத்து ஆவணங்களும் பயன்படுத்தப்படுகின்றது. | தேவையற்ற படிவங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பல ஆண்டுகளாக அங்கீகரித்த பதவியணியில் காணப்பட்ட வெற்றிடங்களுக்காக மீளாய்வாண்டின் போது ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் 5 பணிப்பாளர் பதவிகள், 7 பிரதி உதவி பணிப்பாளர் பதவிகள், 2 நிர்வாக உத்தியோகத்தர் பதவிகள், 16 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், 65 முகாமைத்துவ உதவியாளர்கள் பதவிகள் மற்றும் 12 சாரதி பதவிகள் வெற்றிடங்கள் காணப்படுகின்றமை நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு தடையாக இருந்தும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான பதவியணியினர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை வேண்டி அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட உடன் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிகழ்கால தேவைப்பாட்டிற்கு பொருந்தும் வகையில் 2018 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் திருத்துவதற்கு மற்றும் அந் நடைமுறையிலுள்ள தகமைகளுக்கு இணங்கும் வகையில் சபைக்கு மரபு ரீதியான சம்பள கட்டமைப்பைத் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அது செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் திருத்துவது தொடர்பாக கிடைத்துள்ள பிரேரனைகள் சம்பந்தமாக ஒரு குழுவினை நியமித்து கலந்துரையாடியதன் பின்னர் திருத்துதல் நடவடிக்கையைப் பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நிகழ்கால தேவைப்பாட்டிற்குப் பொருத்தமான வகையில் ஆட்சேர்ப்பு நடைமுறையைத் திருத்தம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஏனைய பயிர் காப்புறுதிகளின் கீழ் உழுந்து, கௌபி, பயறு முதலிய பயிர்களில் 13,154 ஏக்கர்களிலிருந்து ரூபா 12,109,000 காப்புறுதி | அரசாங்க வங்கிகளினூடாக பயிர்ச்செய்கை கடன்களை பெற்றுக்கொள்வதற்கு வேண்டிக்கொண்ட விவசாயிகளுக்கு காப்புறுதி பூட்கைகளை வழங்குவதன் மூலம் அதிக தவணைப் பண வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு | அடைந்துகொள்ளக்கூடிய இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்தை உழைப்பதற்கு கருதியிருந்த போதிலும் உள்ளபடியாக ரூபா 2,223,095 உழைக்கப்பட்டிருந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியில் 18 சதவீதங்களாகும். | இலக்கிடப்பட்டிருந்தும் விவசாய மக்களின் வேண்டுதல்கள் மற்றும் பயிர்ச்செய்கை கடன் வழங்கும் எதிர்பார்த்த செயல் முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | |
| (ஆ) | காலநிலை குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதித் திட்டத்தில் முன்னோடிச் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டம் பொலன்னறுவை, அம்பாறை, குருனாகல் ஆகிய மாவடடங்களை தளமாகக் கொண்டு அமுல்படுத்துவதற்கு கருதப்பட்டிருந்தும் அதற்கிணங்க அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முன்னோடிச் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட பொலன்னறுவை, அம்பாறை, குருனாகல் ஆகிய மாவட்டங்களில் தேவையான அடிப்படைத் தரவுகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | முன்னோடிச் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு தேவையான தரவுகள் தகவல்களை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | குறிகாட்டியின் அடிப்படையிலான காப்புறுதி முறைமையினை அமுல்படுத்துவற்காக நவீன தொழில்நுட்பத்தை ஈடுபடுத்துவதன் கீழ் தொழில்நுட்பக் கருவிகளை கொள்வனவு செய்வதற்கும் அதற்குத் தேவையான கணினி மென்பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் சபை எதிர்பார்த்திருந்தும் அச் செயற்பாடும் இடை நடுவில் கைவிடப்பட்டிருந்தது. | தேவையான கடினப் பொருட்கள் மற்றும் மென்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒரு பெறுகைக் குழுவினை நியமிக்குமாமறு தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு ஆலோசனை வழங்கியுள்ளது. | காப்புறுதி நடைமுறையினை வெற்றியளிக்கச் செய்வதற்காக தேவையான உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 4.2 நிலைபேறான அபிவிருத்திக் குறிகோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| ஏதாவது ஒரு செயற்பாட்டின் சரியான செயலாற்றலை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படை காணப்படுதல் அத்தியாவதிசமானதாக இருந்த போதிலும் காப்புறுதி செய்த விவசாயிகள் தொடர்பாகவும் விவசாய நிலம் தொடர்பாகவும் சரியான தரவு முறைமையை உருவாக்கிக் கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இதுவரை விவசாயிகளின் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையைத் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விவசாயிகளின் தகவல்களை உள்ளடக்குவதற்கும் காணிகள் மற்றும் கட்டிடடங்களின் வரைபடங்களை உருவாக்குவதற்கும் தேவையான தரவு முறைமை உருவாக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் நடமாடும் தொலைபேசியைப் பயன்படுத்தி மேலே குறிப்பிட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான மொடியூலும் உருவாக்கி பூரணப்படுத்தப்பட்டுள்ளது. | மொடியூலுக்குத் தேவையான தரவுகள் உள்ளடக்கப்படாததனால் விரைவாக அது செய்யப்படுதல் வேண்டும். |